
PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE PRIMARY 4 - 2013

PAPER 1 – COMPOSITION

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு <u>60 சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை எழுதுக . படத்தின் அடியில் கொடுக்கப்பட்டுள்ள உதவிச் சொற்களைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளவும் .




| | |
|---|---|
| குறும்புத்தனம் மிக்க | மாட்டிக் கொண்டு |
| மின்தூக்கி | அழுகை வந்தது |
| பித்தான்கள் | பழுது பார்ப்பவர் |
| அண்டைவீட்டுக்காரர் | கண்டித்தார் |


P4 SA2

1 முதல் 5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உ
ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.

ஓர் ஊரில் வேந்தன் ஒருவன் வாழ்ந்து வந்தான். வேந்தனுடைய 1) ______ அடா அந்நாட்டு மக்கள் அனைவரும் சுரங்கத்துக்குச் சென்று தண்ணீரைத் தோண்டி எடுக் பாடுபட்டார்கள். அவர்கள் அங்குப் பல மாதங்கள் கடுமையாக உழைத்தார்கள். 2)______ கட்டாயக் கட்டளை மக்களை வாட்டி எடுத்தது. 3) ______ வேலை செய்தவர்களுக்குச் சரியா ஊணுமில்லை; உறக்கமுமில்லை. வேந்தன் இப்படிக் கொடுமைப்படுத்துகிறானே என்று துன்பமு ஆத்திரமும் அடைந்தார்கள்.

ஒரு நாள் சில பெண்கள் கூட்டமாக 4) ________ சென்று முறையிட்டனர். இந்த 5)________ தங்களுடைய கணவன்மார்களை விடுவிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்க அவர்கள் கண்ணீர் விட்டுக் கதறினார்கள். அரசி அவர்களுக்குச் சமாதானம் சொல்லி அவர்களை அனுப்பினாள்.

1.
1. ஆணை
2. ஆணைக்கு
3. ஆணையின்
4. ஆணையாக

2.
1. வேந்தனுக்கு
2. வேந்தனுடன்
3. வேந்தனோடு
4. வேந்தனது

1. நிலத்தில்
2. நிலத்தின்
3. நிலத்துடன்
4. நிலத்திற்கு

1. அரசியுடன்
2. அரசியின்
3. அரசியிடம்
4. அரசியை

1. கொடுமை
2. கொடுமையில்
3. கொடுமைக்கு
4. கொடுமையிலிருந்து

முன்னுணர்வுக் கருத்தறிதல் ( 5 ம. எ. )

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.
6 முதல் 10 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது

ஓர் இடையன் ஒரு ஓநாய்க் குட்டியைக் கண்டான். அதனை வீட்டுக்குக் கொண்டு போய் 6. (______) தொடங்கினான். அது சற்றுப் பெரிதானதும் அதற்குத் திருடக் கற்றுக் கொடுத்தான். மற்றவர்களின் ஆடுகளைத் திருடிக் கொண்டுவர அதை 7. (______). ஓநாயும் திருடுவதில் மிகவும் 8. (______) பெற்றுவிட்டது.

ஒரு நாள் ஓநாய் இடையனிடம், "நீ எனக்குத் திருடக் கற்றுத் தந்தாய். இப்போது அதில் நான் வல்லவனாகிவிட்டேன். இனி உன் ஆடுகளை 9. (______) பார்த்துக்கொள். அவற்றில் சில காணாமற்போனாலும் போகலாம்," என்று கூறியது. இதைக் கேட்டதும் இடையன் 10. (______). தான் செய்த தவறு தனக்கே தீமை விளைவிக்கப்போவதை எண்ணி அவன் வருந்தினான்.

| | | |
|---|---|---|
| 1. பழக்கினான் | 2. திடுக்கிட்டான் | 3. பலம் |
| 4. பத்திரமாக | 5. திறமை | 6. வேடிக்கையாக |
| 7. அழுதான் | 8. வளர்க்க | |

செய்யுள் \ பழமொழி

கீழ்க்காணும் செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

11. ஐந்திலே வளையாதது ஐம்பதில் ______________?

1. புரியுமா
2. வளருமா
3. தெரியுமா
4. வளையுமா

( )

12. ஆத்திரக்காரனுக்கு ______________ மட்டு.

1. மூளை
2. நாக்கு
3. புத்தி
4. அறிவு

( )

13. ______________ அறியாமல் காலை இடாதே.

1. அளவு
2. அன்பு
3. ஆழம்
4. அறிவு

( )

14. ______________ நண்பனை ஆபத்தில் அறியலாம்.

1. நெருக்கமான
2. உதவியான
3. அன்பான
4. உண்மையான

( )

15. ______________ அழகு முகத்தில் தெரியும்.

1. விழியின்
2. அகத்தின்
3. உடலின்
4. மனத்தின்

( )

*தெரிவுவிடைக் கருத்தறிதல்* ( 5 மதிப்பெண் )

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

அபு என்ற புலவர் ஒருவர் அரபு நாட்டில் வாழ்ந்து வந்தார். அவர் குறி தவறாமல் அம்பு எய்வதில் திறமை உடையவர். ஒரு தடவை, அவர் நாவல் மரத்தின் ஒரு கிளையை வெட்டினார். அவர் ஒரு வாரம் கடுமையாக உழைத்து அதை அழகான வில்லாக உருவாக்கினார்.

இரவு நேரம் நெருங்கியதால் காட்டில் வாழும் விலங்குகளை வேட்டையாடப் புறப்பட்டார். அப்போது கழுதையின் கத்தலும் காலடி ஓசையும் கேட்டன. அவர் ஓசை வந்த திசையை நோக்கி அம்பை எய்தார். அம்பு பாறையில் மோதிய ஓசைதான் அவருக்குக் கேட்டது. சிறிது நேரத்தில் மீண்டும் கழுதையின் ஓசை கேட்டு அம்பு எய்தார். ஐந்து முறையும் குறி தவறிவிட்டதே என்று அவர் *கோபம்* அடைந்தார். அவர் பல நாள்கள் முயன்று உருவாக்கிய வில்லை உடைத்து எறிந்தார்.

பொழுது விடிந்தது. ஐந்து கழுதைகள் அம்பு துளைத்து இறந்து கிடந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். கழுதைகளுக்குப் பின்னால் ஒரு பெரிய பாறை இருந்ததைக் கவனித்தார். உடனே, அபு நடந்ததைப் புரிந்துகொண்டார். அவர் குறி ஒரு முறைகூடத் தவறவில்லை. கழுதையைத் துளைத்துச் சென்ற அம்பு ஒவ்வொரு முறையும் பாறையில் மோதி ஓசை எழுப்பி உள்ளது. அவர் பொறுமையைக் கடைப்பிடிக்காமல் அருமையான வில்லை உடைத்து எறிந்ததை எண்ணி வருந்தினார்.

**கீழ்க்காணும் வினாக்கள் கொடுக்கப்பட்டிருக்கும் கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. பின்னர், அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**

16. அபு எதில் திறமைசாலி?

( 1 ) மரத்தை வெட்டுவதில்
( 2 ) வில் செய்வதில்
( 3 ) அம்பு விடுவதில்
( 4 ) மிருகங்களை வேட்டையாடுவதில் ( )

17. அபு எப்போது வேட்டையாடக் கிளம்பினார்?

( 1 ) மாலையில்
( 2 ) இரவில்
( 3 ) நள்ளிரவில்
( 4 ) அதிகாலையில் ( )

18. முதல் தடவை குறி தவறியதை அபு எப்படித் தெரிந்துகொண்டார்?

( 1 ) அம்பு புல் தரையில் விழுந்தபோது
( 2 ) கழுதையின் ஓசையை மீண்டும் கேட்டபோது
( 3 ) அம்பு பாறையின் மீது மோதியபோது
( 4 ) கழுதை அங்கிருந்து வேகமாக ஓடியபோது ( )

19. அபு ஏன் தம் வில்லை உடைத்தார்?

( 1 ) அவருக்கு மிகவும் களைப்பாக இருந்ததால்
( 2 ) அவர் ஐந்து முறை தோல்வியடைந்ததால்
( 3 ) அவருக்கு அதிகச் சலிப்பு ஏற்பட்டதால்
( 4 ) அவர் ஒரு முறை குறி தவறியதால் ( )

20. அபு எதனால் கவலைப்பட்டார்?

( 1 ) அவர் எல்லாக் கழுதைகளையும் கொன்றதால்
( 2 ) அவர் எய்த அம்புகளைத் தொலைத்ததால்
( 3 ) அவர் உருவாக்கிய வில்லை உடைத்ததால்
( 4 ) அவர் தம் பொறுமையை இழந்ததால் ( )

*சொற்பொருள்* ( 4 மதிப்பெண் )

கீழ்க்காணும் சொற்கள் கொடுக்கப்பட்டிருக்கும் கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. பின்னர், அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

21. உருவாக்கினார்

1. முடித்தார் 2. உண்டாக்கினார்

3. தீட்டினார் 4. வரைந்தார் ( )

22. ஓசைதான்

1. வலிதான் 2. அதிர்ச்சிதான்

3. சத்தம்தான் 4. காட்சிதான் ( )

23. கோபம்

1. ஆத்திரம் 2. வேதனை

3. வருத்தம் 4. ஏமாற்றம் ( )

24. எறிந்தார்

1. வீசினார் 2. கொளுத்தினார்

3. நொறுக்கினார் 4. உண்டார் ( )

5. கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

# இந்திய கலாச்சார மன்றம் வழங்கும் சிறுவர்களுக்கான நடனப்போட்டி



போட்டி நடைபெறும் நாள் - **14.10.07** ஞாயிற்றுக்கிழமை
காலை **9** முதல் **11** வரை
இடம் பூன்லே சமூக மன்றம்

போட்டியாளர்களுக்குக் காத்திருக்கும் பரிசுகள்

| | |
|---|---|
| முதல் பரிசு - | **$300** பற்றுச்சீட்டும் வெற்றிக் கோப்பையும் |
| இரண்டாவது பரிசு - | **$200** பற்றுச்சீட்டும் வெற்றிக் கோப்பையும் |
| மூன்றாவது பரிசு - | **$100** பற்றுச்சீட்டும் வெற்றிக் கோப்பையும் |
| நான்காவது முதல் பத்தாவது வரை - | சான்றிதழ்கள் |

பதிவு செய்ய வேண்டிய இறுதி நாள் **8.9.07**

இந்தப் போட்டி **12** வயதுக்கு உட்பட்டோர்க்கு மட்டும்தான்.

நன்றாக நடனம் ஆடத் தெரிந்தவர்கள் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும். சிறுவர்களே! தாமதிக்காமல் உடனே உங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

| |
|---|
| கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை கண்டறிந்து அடைப்புக்குறிக்குள் எழுது.(6ம) |

25. இந்தப் போட்டியில் யார் கலந்துகொள்ளலாம்?

(1) உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்
(2) தொடக்கப்பள்ளிச் சிறுவர்கள்
(3) பாலர்பள்ளிச் சிறுவர்கள் ( )

26. முதல் 3 நிலையில் வெற்றி பெறுபவர்களுக்கு என்னென்ன பரிசுகள் வழங்கப்படும்?

(1) பணமும் கோப்பையும்
(2) சான்றிதழும் கோப்பையும்
(3) வெற்றிக்கோப்பையும் பற்றுச்சீட்டும் ( )

27. போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கு என்ன இருக்க வேண்டும்?

(1) நடனம் ஆடுவதில் நாட்டம்
(2) நடனம் ஆடுவதில் ஆர்வம்
(3) நடனம் ஆடுவதில் ஆற்றல் ( )

ஒலி வேறுபாடு
கோடிட்ட இடத்தை நிரப்பு. (5 மதிப்பெண்கள்)

28. அவர் குருடனைக் கண்டு மனம் ______________ அவனுக்கு உதவினார்.

( இரங்கி, இறங்கி )

29. மீனவன் ______________ நிறைய மீன்களைப் பிடித்தான்.

( வலையில், வளையில் )

30. அம்மா கோழியைப் ______________.

( பொறித்தார், பொரித்தார் )

31. தைப்பூசம் இந்துக்களின் சமய ______________ ஆகும்.

( விலா, விழா )

32. என்னிடம் ______________ காசு இருக்கிறது.

( என்பது, எண்பது )

## 7. கருத்தறிதல் (10 ம.பெ)

பின்வரும் கதையைப் படி

தேவன் தன் குடும்பத்துடன் ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தான். படிப்பறிவு இல்லாத அவனுக்கு யாரும் வேலை தரவில்லை. அதனால் அவனும் அவன் குடும்பத்தாரும் பட்டினியால் வாடினர். அவன் ஒரு கனவு கண்டான். கனவில் தோன்றிய ஆடவர், அருகிலுள்ள பாலத்தில் நின்றால் நற்செய்தி கிடைக்கும் என்று சொன்னார். மறுநாள் அவன் பாலத்திற்குச் செல்ல முடிவு செய்தான்.

அங்கு அவன் பல நாட்கள் தொடர்ந்து நின்றான். ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. அவன் சோர்வுடன் வீட்டிற்குக் கிளம்பினான். அப்போது அங்கே வந்த முதியவர், "நான் உன்னைத் தினமும் பார்க்கிறேன். ஏன் இங்கே வந்து நிற்கிறாய்?" என்று வினவினார். தேவன், தான் கண்ட கனவைப் பற்றி முதியவரிடம் கூறினான்.

முதியவர், "கனவில் கண்டதையெல்லாம் நம்பலாமா? நான் கூட சென்ற வாரம் நம் பூங்காவிலுள்ள பலாமரத்தின் அடியில் புதையல் இருப்பதாகக் கனவு கண்டேன். நான் இதையெல்லாம் நம்பவில்லை," என்று கூறிவிட்டுச் சென்றார்.

உடனே தேவன், அந்தப் பலாமரம் இருக்கும் இடத்திற்குச் சென்றான். மரத்தின் அடியில் தோண்டியபோது ஒரு பெட்டி நிறைய பொற்காசுகளைக் கண்டெடுத்தான். அன்று முதல் அவனும் அவன் குடும்பத்தாரும் வறுமை நீங்கி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

கேள்விகளுக்குப் பதில் எழுது.

33. தேவன் ஏன் பட்டினியால் வாடினான்?

________________________________________

________________________________________

34. கனவில் தோன்றிய ஆடவர் ஏன் தேவனைப் பாலத்தில் நிற்கச் சொன்னார்?

________________________________________

________________________________________

35. தேவன் எப்போது முதியவரைப் பார்த்தான்?

________________________________________

________________________________________

36. முதியவர் எதை நம்பக்கூடாது என்று கூறினார்?

________________________________________

________________________________________

37. தேவன் எவ்வாறு பணக்காரன் ஆனான்?

________________________________________

________________________________________

________ முற்றும் ________

P4

TESTPAPER 8

விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. (2) | 2. (4) | 3. (1) | 4. (3) | 5. (4) |
| 6. (8) | 7. (1) | 8. (5) | 9. (4) | 10. (2) |
| 11. (4) | 12. (3) | 13. (3) | 14. (3) | 15. (2) |
| 16. (3) | 17. (2) | 18. (3) | 19. (2) | 20. (3) |
| 21. (2) | 22. (3) | 23. (1) | 24. (1) | |
| 25. (2) | 26. (2) | 27. (3) | | |

28. இரங்கி 29. வலையில் 30. பொரித்தார் 31. விழா 32. எண்பது

33. தேவனுக்கு யாரும் வேலை தராததால் அவன் பட்டினியால் வாடினான் .

34. பாலத்தில் நின்றால் நற்செய்தி கிடைக்கும் என்பதால் கனவில் தோன்றிய ஆடவர் தேவனைப் பாலத்தில் நிற்கச் சொன்னார் .

35. தேவன் பல நாட்களுக்குப் பிறகு முதியவரைப் பார்த்தார்.

36. முதியவர் கனவில் கண்டதை எல்லாம் நம்பக்கூடாது என்றார் .

37. கனவில் கண்டபடி தேவனுக்குப் பெட்டி நிறைய பொற்காசுகள் கிடைத்ததால் தேவன் பணக்காரன் ஆனான் .